பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 25 திங்கட்கிழமை 11.10.2021 கதிர் 204

## சட்டவிதிகளை மீறிய மேலும் 85 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்தலைமையகம் இன்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது. 2

## மீனவரின் படகை எரித்த விஷமிகள்



(ந.லோகதயாளன்)

யாழ். மாதகல் - குசுமந்துறை கடற்கரையில் மீனவரின் படகை இனந்தெரியாத நபர்கள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். 2

## வன்முறைக் கும்பல் பெரும் அட்டகாசம்!

(ந.லோகதயாளன்)

பருத்தித்துறை, புனிதநகர் பகுதியில் வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வன்முறைக் கும்பல் ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது. 2

## வடக்கின் புதிய ஆளுநர் கோட்டா முன் பதவியேற்பு



வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டார். 2

# தொடர் விலையேற்றத்தால் மூவின மக்களும் கொதிப்பு

## கோட்டா அரசு மீது கடும் சீற்றம்

நாட்டில் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வருவதால் அனைத்து மக்களினதும்வாழ்வாதாரம்பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவும் உச்சம் தொட்டுள்ளது. 2




## அரசியல்வாதிகள் எமது எல்லைக்குள் வந்தால் ஓட ஓட அடித்து விரட்டுவோம்

### பருத்தித்துறை மீனவர்கள் பகிரங்க எச்சரிக்கை

(ந.லோகதயாளன்)

இந்திய இழுவைப் படகையும்,தடைசெய்யப்பட்டஅனைத்து மீனவ தொழில்களையும் உடனடியாக நிறுத்தும் வரை எந்தவொரு அரசியல் தலைவர்களும் தமது எல்லைக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம் 2



## இந்தியத் துணைத் தூதுவருடன் சுமந்திரன் எம்.பி. நேரில் சந்திப்பு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இன்று நேரில் சந்தித்தார்.

யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு இன்று மாலை 3 மணியளவில் வருகை தந்த அவர் சந்திப்பில் 2



## தமிழரைச் சயனைட் குப்பிகளையும், துப்பாக்கிகளையும் ஏந்த வைத்தவர்கள் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளே!

### இராஜாங்க அமைச்சரின் கருத்துக்கு சிறிதரன் எம்.பி. தக்க பதிலடி



தமிழ் இளைஞர்களைச் சயனைட் குப்பிகளையும், துப்பாக்கிகளையும் ஏந்த வைத்தவர்கள் பௌத்த, சிங்களப் பேரின வாதிகளே.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின் கருத்துக்குப் பதிலளிக்கும்போதே சிறிதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரம் நடைபெற்ற நயினாதீவு நீர்வழங்கல் திட்டத்துக்கான கடல்நீரை நன்னீராக்கும் சுத்திகரிப்பு நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய, கிராமிய மற்றும் பிரதேச நீர்வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க 2

## தமிழுரைச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சனத் நிசாந்த, 'சயனைட் குப்பிகளையும், புத்தகங்களையும் ஏந்திய வடக்கு மாகாண இளைஞர்களை இன்று புத்தகங்களையும், பேனாவையும் ஏந்த வைத்திருப்பதாகவும், இந்த நல்லெண்ணத்திற்கு வித்திட்டவர்கள் இன்றைய ஜனாதிபதியும், பிரதமருமே' என்றும் குறிப்பிட்டிருந்த கருத்து உண்மைக்குப் புறம்பான புனைவாகும். அது அமைச்சரின் சிங்கள, பௌத்த பேரினவாத சிந்தனையையே எடுத்துக்காட்டுகிறது.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் குறித்தோ, அதன் வரலாறு பற்றியோ, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றுவாய் குறித்தோ இராஜாங்க அமைச்சர் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், இத்தகைய கருத்துக்களை வெளியிட முன்னராவது வரலாற்றை அறிவதற்கு அவர் முயற்சித்திருக்க வேண்டும். இந்த நாட்டில் எழுபது ஆண்டுகளுக்கு மேலாகப் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு அடித்தளமிட்டது யார் என்பதையும், தமது சொந்த நாட்டில் இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து, அமைதிவழியில் போராடிப் பெறமுடியாது போன அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே தமிழர்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதை இனியாவது இராஜாங்க அமைச்சர் கற்றுக்கொள்வது அவரது அரசியல் எதிர்காலத்துக்கு தேவையானதாக அமையும்.

சுதந்திர இலங்கையில் என்ன நிகழ்ந்தது என்பதை அப்போது பிறந்தேயிராத அமைச்சர் அறிந்திருக்க மாட்டார். அதன் விளைவாகத்தான் அவர் வெளியிட்டுள்ள கருத்தும் அத்தனை அபத்தமாக அமைந்துள்ளது. 1957 இலும், 1965 இலும் இலங்கையில் இனச் சமத்துவத்தை அங்கீகரிக்க அடிப்படையாக அமைந்த பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், டட்லி - செல்வா ஒப்பந்தத்தையும் சிங்கள அதிகாரப் பீடங்கள் தான் கிழித்தெறிந்தன.

பன்மைத்துவமற்ற அரசியலமைப்பை உங்கள் இனத்தவர்கள் தான் உருவாக்கினார்கள், பௌத்தத்தை மட்டும் முதன்மை பெற வைத்து, தரப்படுத்தலை சிங்களத் தலைவர்களே மேற்கொண்டார்கள், தமிழ்மொழியைப் புறக்கணித்து, தமிழர் தாயகத்தில் நிலவிய மரபுரிமை சார்ந்த கூட்டு வாழ்வைச் சிதைத்து, சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கினார்கள், இனவாதிகளை உருவாக்கி எம்மின மக்களை வெட்டிச் சரித்தும், சொத்துக்களை அழித்தும், தீயிட்டுக் கொளுத்தியும், தமிழ்ப் பெண்களின் மார்புகளில் சிங்கள 'ஸ்ரீ' ஐ கொதிக்கும் தாரால் குறிவைத்தும், பச்சிளம் குழந்தைகளை கொதித்த தார்ச்சட்டிகளுள் வீசி எறிந்தும், தமிழ் இளைஞர்களின் கண்களை உயிரோடு தோண்டிஎடுத்தும் ஓரினத்தின் இருப்பை அடியோடு ஆட்டம்காண வைத்து, அவர்களின் உணர்வுகளை கொதிநிலைக்கு இட்டுச் சென்றது யாரென்பதை இந்த உலகம் அறியும்.

தமிழர்கள் ஒரு அறிவார்ந்த சமூகம் என்பதை எண்பித்த வரலாற்றுச் சாட்சியமாய், தமிழர்களின் தனிப்பெரும் கல்வி அடையாளமாய் இருந்த தெற்காசியாவின் அறிவுக் களஞ்சியமான யாழ்ப்பாணம் பொதுநூலகத்தை 1981 யூன் 30ம் திகதி நள்ளிரவு தீயிட்டுக் கொளுத்தி எமது இனத்தின் அறிவாண்மையைச் சிதைக்கும் செயலில் சிங்கள இனவெறியர்கள் ஈடுபட்டதை, அப்போது ஆறு வயதுச் சிறுவனாக இருந்த நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லைத்தான். இந்த அவலம் மிகுந்த வரலாற்றால் வெஞ்சினம் கொண்ட இளைஞர்கள் தான், வெகுண்டெழுந்து எமக்கான வரலாற்றைப் படைத்தார்கள். அடக்கப்படுகிற போது விடுதலை பெற வேண்டுமென்ற உணர்வு மனித சமூகத்தின் தன்னியல்பான குணாம்சம். அதனையே எங்கள் இளைஞர்களும் செய்தார்கள். அவர்கள் ஒருபோதும் வன்முறையை விரும்பியவர்களல்ல. ஆயுதங்களை அவர்கள் விரும்பிஏற்றவர்களும் அல்ல. தங்களையும், தங்கள் இனத்தையும் தற்காத்துக் கொள்வதற்காக போராடி அதற்காகவே தங்கள் உயிர்களை ஈர்ந்தார்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனே 'ஆயுதங்களை நாம் ஒருபோதும் விரும்பி ஏற்கவில்லை. அவை எம்மீது வலிந்து திணிக்கப்பட்டவையே' என்று 1985 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து வெளிவந்த சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.

இவற்றைவிட சிங்கள இனவாத அரசு காலம்காலமாக மேற்கொண்டு வந்த தமிழினப் படுகொலைகளும், தமிழர் களின் வாழ்வியல் போக்கைத் திசைமாற்றியதில் பெரும் பங்கு வகித்தன. வடக்கு இளைஞர்களைத் தாம் புத்தகமும், பேனாவும் தூக்க வைத்திருப்பதாகப் பெருமிதம் கொள்ளும் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, இனவாத அரசால் வயதுவேறுபாடற்று மேற்கொள்ளப்பட்ட சிறுவர் படுகொலைகள் குறித்தும் அறிய முற்பட வேண்டும். நவாலிப் படுகொலை, நாகர்கோவில் பாடசாலைப் படுகொலை, கொக்கட்டிச் சோலைப் படுகொலை, வாகரைப் படுகொலை, செஞ்சோலைப் படுகொலை, முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புப் படுகொலை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவிச் சிறுவர்களின் உயிரிழப்புக்களுக்கும், இறுதிப் போரின்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து காணாமலாக்கப்பட்ட பலநூற்றுக் கணக்கான சிறுவர்களுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுக்கத் திராணியற்ற பேரினவாத நாட்டில், தமிழ் மாணவர்களின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் அக்கறையும், பெருமிதமும் அடைவது நகைப்புக்கிடமான செயலாகும்.

வரலாறு இவ்வாறிருக்க, நல்லெண்ணத்திற்கு வித்திட்டதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிடும் இன்றைய ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது எம் இனம் மீது பிரயோகித்துவரும் அடிப்படை வன்முறைகள் கூடவா அமைச்சரின் கண்களுக்கு இன்னும் புலப்படவில்லை?. நாம் கண்ணீர் விட்டு அழவும் தடையுத்தரவு தருகின்றீர்கள். ஒவ்வொரு அப்பாவித் தாய், தந்தையின் நெஞ்சிலும் ஆணியால் அடிக்கிறீர்கள், தங்கள் தாய், தந்தையரின் கல்லறைகள் இல்லாது போன காலத்திலும், அவர்கள் புதையுண்ட நிலங்களை முத்தமிடத் துடிக்கின்ற பிள்ளைகளின் தலையிலே சம்மட்டியால் அடிக்கின்றீர்கள். அவர்களை நினைந்து அழுவதையும், தொழுவதையும் பயங்கரவாதம் என பறைசாற்றுகிறீர்கள். இலங்கை தேசத்தில் வாழ்கின்ற சிங்கள தேசிய இனம் போலவே நாமும் ஓர் தேசிய இனமாக, எமக்கென்றோர் தனித்துவமான பண்பாட்டு, விழுமியங்களோடு இந்த வரலாற்றுத் துயர்களை எல்லாம் மறந்து வாழ முற்படும் வேளையில் சர்வதேச மனித உரிமை சாசனங்களை மீறி, இலங்கையின் உள்நாட்டு அடிப்படை உரிமைகளுக்கு முரணாக, சர்வதேச சமவாயங்களின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கூட அங்கீகரிக்கத் தவறி, எமது சமூக, பண்பாட்டு, விழுமியங்களை நிராகரித்து 'பௌத்த புராண, இதிகாசமான மகாவம்ச சிந்தனைகளிலிருந்து சிங்களதேசம் மீண்டு வந்து தமிழ் மக்களுக்கு சமத்துவமான தீர்வொன்றைத் தருமென்று நான் துளியேனும் நம்பவில்லை' என்ற தமிழீழ தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரனின் சிந்தனையை மெய்ப்பிப்பதாகவே உங்கள் செயற்பாடுகள் இன்றும் அமைந்துள்ளன.

கைதுகள், காணாமலாக்கல்கள், நில ஆக்கிரமிப்பு, மரபுரிமைச்சின்னங்களை அழித்தல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என தமிழ்த்தேசிய இனம் மீதான உங்களின் அடிப்படை இனவன்முறைகள் இன்னும் இன்னும் அதிகரித்துச் செல்லும் அதியபயங்கரமான சூழலில் எமது போராட்டம் குறித்து கருத்துரைப்பதற்கு அருகதையற்ற இராஜாங்க அமைச்சர், சயனைட் குப்பியும், துப்பாக்கியும் ஏந்திய எங்கள் பிள்ளைகளை தாமே புத்தகங்களை ஏந்த வைத்திருப்பதற்காக தெரிவித்துள்ள கருத்தை அவரது அரசியல் அறியாமையின் வெளிப்பாடாகவே நான் பார்க்கிறேன் - என்றார்.

## வடக்கின் புதிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று முற்பகல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், புதிய ஆளுநராக அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

## சட்ட விதிகளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 560ஆக உயர்வடைந்துள்ளது.

## மீனவரின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மாதகல் - குசுமந்துறைக் கடலில் தொழிலில் ஈடுபடும் குறித்த படகு கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் தீ மூட்டப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வன்முறைக் கும்பல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அப்பகுதியில் உள்ளவர்களுடன் முரண்பட்ட நிலையில் நேற்று வெளியிடங்களில் இருந்து சுமார் 20 இற்கும் மேற்பட்ட வன்முறையாளர்கள் வாள்கள், கூரிய ஆயுதங்கள் உள்ளிட்டவற்றுடன் அப்பகுதிக்குள் இறக்கி அட்டகாசம் புரிந்துள்ளனர்.

அதன்போது சிலரின் வீடுகளுக்கு கல் வீசி தாக்குதல் நடத்தியதுடன், வேலிகள் சிலவற்றுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வந்தபோது வன்முறைக் கும்பல் அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

அந்நிலையில் அப்பகுதி மக்களுடன் ஏற்கனவே முரண்பட்டு இருந்த அப்பகுதியைச் சேர்ந்த நபரைப் பொலிஸார் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## அரசியல் வாதிகள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பருத்தித்துறை முனை கடற்தொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

பருத்தித்துறை முனை கடற்தொழிலாளர்கள் இன்று முன்னெடுத்த எதிர்ப்புப் போராட்டத்தின்போதே இந்த அறிவித்தலை விடுத்துள்ளனர்.

அத்தோடு, அரசியல் தலைவர்கள் தங்களுடைய கோரிக்கையை மீறி எமது இடத்துக்கு வரும் பட்சத்தில் அடித்துவிரட்டப்படுவார்கள் என்பதையும் தாம் உறுதியாகவும், மன வருத்தத்துடனும் தெரிவிப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி, தங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு யாரும் முன்வராவிட்டால் தாங்கள் மனித வெடிகுண்டுகளாக மாறி தங்களுடைய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தனும் வருகை தந்திருந்தார்.

## தொடர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர் விலையேற்றம் குறித்து மூவின மக்களும் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். அரசு மீது விமர்சனக்கணைகளையும் பகிரங்கமாகத் தொடுத்து வருகின்றனர்.

பால் மாவின் விலை ஏற்கனவே அதிகரித்திருந்த நிலையில், நேற்றிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை சீமெந்து மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் பேக்கரி உற்பத்திப் பொருள்கள், சாப்பாட்டு பார்ஷல், கொத்துரொட்டி மற்றும் தேநீர் உள்ளிட்ட பல பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாகப் பாணின் விலையை அதிகரிக்க பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

450 நிறையுடைய ஒரு இறாத்தல் பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே 50 கிலோ சீமெந்து மூட்டையின் விலையும் 93 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க எரிபொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 70 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாலேயே விலை அதிகரிப்பு இடம்பெற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இனி அரைப் பட்டினிதான்!

பொருள்களின் விலை அதிகரிப்பு பற்றிய பட்டியல் தினசரி வெளிவந்து குடும்பத் தலைவர், தலைவிகளின் வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டிருக்கின்றது.

ஒரு கிலோ பால் மா பக்கெட் சுமார் ரூபா இருநூற்றியைம்பதால் உயர்கின்றது. பன்னிரண்டரை கிலோ எடையுடைய காஸ் சுமார் 1,250 ரூபாவால் எகிறுகின்றது. கோதுமை மா கிலோ 10 முதல் 12 ரூபாவாலும், 50 கிலோ சீமெந்து பக்கெட் 97 ரூபாவாலும் கூடுகின்றன.

உடனடியாக பாண் உட்பட பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும். தேநீரில் இருந்து ஒவ்வொரு பொருளினதும் விலை கண்மூடித்தனமாக உயர்வது கண்கூடாக முன்னால் நடக்கின்றது. மக்கள் அதிர்ச்சியில் உறைந்து போய் இருக்கின்றார்கள்.

இந்த விலை அதிகரிப்பு அந்தப் பொருள்களின் விலை உயர்வோடு அடங்கி விடப்போவதில்லை. தொடர் சங்கிலியாக எல்லா மட்டங்களிலும் அவற்றின் பாதிப்பை எதிர்பார்க்கலாம். ஒட்டோ கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு என்று வாழ்க்கையில் ஒவ்வொரு அங்கத்திலும் இது தாக்கம் செலுத்தப் போகின்றது என்பது திண்ணம்.

வேறு வழியின்றி பல பொருள்களுக்குமான கட்டுப்பாட்டு விலைகளை நீக்குவதாக அரசு அறிவித்தபோது அனைத்து பொருள்களும் இப்படி விலை உயரும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அரிசி, மா விலை உயர்வது மக்களின் அடிப்படை உணவில் வேட்டு வைப்பதற்கு ஒப்பானது. அரிசி விலை உயராமல் சமாளிப்பதற்காக பெருமளவு அரிசியை இறக்குமதி செய்து, கிலோ நூறு ரூபாவுக்கு குறைவான விலையில் அரிசியைத் தாராளமாக விநியோகிக்க அரசு தயாராகி வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கதை விடுகின்றார். நடந்தால் நல்லதுதான்.

இந்தத் திடீர் விலை எகிறலால் ஏற்படும் நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் சாமன்யரின் குடும்பங்கள் திக்குமுக்காடுகின்றன. ஏதேனும் நிவாரண நடவடிக்கைகளை அரசு எடுக்க போவதில்லை என்பதும் கூட உறுதிதான்.

வரும் மாதம் வரவிருக்கும் வரவு – செலவுத் திட்டத்தில் மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல. ஆனால் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறும் கோட்டா அரசு, வரவு – செலவுத் திட்டம் மூலம் மக்கள் மீதான வாழ்க்கைச் சுமையை மேலும் அதிகரிக்கச் செய்யவே அதிக வாய்ப்புண்டு, மக்களுக்கு நிம்மதி தரும் எதுவும் அதில் இருக்கப்போவதில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தற்போதைய விலை உயர்வு அதிகரிப்பின் தொடராக பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களின் விலை அதிகரிப்பு விரைவில் வரக்கூடும் என்ற தகவலும் உண்டு.

இந்த விலை உயர்வினால் வாழ்க்கைச் செலவு எகிறுகின்றது. ஆனால் சாதாரண மனிதனின் வேதனம் – குறிப்பாக அரசு ஊழியரின் சம்பளம் – அதிகரிக்கப்படும் என்பதற்கான சாத்தியம் தென்படவில்லை.

மக்களைப் பொறுத்தவரை ‘வரவு எட்டணா, செலவு பத்தணா, கடைசியில் துந்தணா, துந்தணா’ என்ற நிலைமைதான்.

சாதாரண சராசரி குடும்பங்களில் அன்றாட நிலைமை இனிமேல் அரைப் பட்டினிதான் என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றது கோட்டா அரசின் பொருளாதார நிர்வாகம்.

# மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை ஆரம்பிக்க முடிவு

மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்துச் சேவையை எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு எதிர்வரும் 21ஆம் திகதி தளர்த்தப்படும் என்று தற்போது சுகாதாரப் பிரிவினால் உறுதி செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இதன்படி மாகாணங்களுக்கு இடையில் பஸ் மற்றும் ரயில் சேவைகளை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மாணவர்களுக்காக விசேட பஸ் சேவையை ஆரம்பிக்க இலங்கை போக்குவரத்து சபை எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆசிரியர்கள் – அதிபர்கள் தொழிற்சங்கங்களுக்கும் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு ஒத்திவைப்பு!

ஆசிரியர்கள் - அதிபர்கள் தொழிற்சங்கங்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெறவிருந்த பேச்சு பிற்போடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு இன்று (திங்கட்கிழமை) நடைபெறுமென முன்னதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே குறித்த பேச்சு பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும் தங்களது வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரிவித்தார்.



# 18 வயது இளைஞன் யாழில் கைதானார்!

## இரண்டு வாள்கள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம்- கோண்டாவில் பகுதியில், வாள் வெட்டுக்குழு சந்தேகநபரின் வீட்டில் இருந்து இரண்டு வாள்கள் மீட்கப்பட்டுள்ளன எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கோண்டாவில் பகுதியில் வாள்வெட்டுச்சம்பவங்களுடன்தொடர்புடைய சந்தேகநபரின் வீட்டில் வாள்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களின் அடிப்படையில் மேற்படி வீட்டினை பொலிஸார் முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

இதன்போது, வீட்டினுள் மறைத்து வைக்கப்பட்டு இருந்த இரண்டு வாள்கள் மீட்கப்பட்டுள்ளமையுடன், 18 வயதான சந்தேநபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# ஓமந்தையில் விபத்து; ஒருவர் படுகாயம்!

வவுனியா- ஓமந்தைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நெடுங்கேணியில் இருந்து வவுனியா நோக்கி சென்ற ஓட்டோ, ஓமந்தைப் பகுதியில் வைத்து வீதியின் மறுபக்கமாக திரும்பியுள்ளது.

இதன்போது வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள், ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதியான ஓமந்தை மருதோடையைச் சேர்ந்த 30 வயதுடைய கமல்ராஜ் என்ற இளைஞன், படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது



# ஆப்கானிஸ்தான் மகளிர் கால்பந்து அணிக்கு பிரித்தானியா அடைக்கலம் கொடுக்கத் தயார்



ஆப்கானிஸ்தானில் தலிபான்களிடம் இருந்து தப்பித்த மகளிர் கால்பந்து அணியின் வீராங்கனை மற்றும் அவர்களது குடும்பம் தங்கள் நாட்டில் குடியேறலாம் என பிரித்தானியா அறிவித்துள்ளது.

இதுகுறித்து பிரித்தானிய அரசாங்க செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'நாங்கள் ஆப்கானிஸ்தான் மகளிர் மேம்பாட்டுக் குழுவுடன் பேசி விசாக்களை இறுதி செய்து, விரைவில் பிரித்தானியாவுக்கு அவர்களை வரவேற்க காத்திருக்கிறோம்' என கூறினார். 13 முதல் 19 வயதுடைய 35 மகளிரைக் கொண்ட குழு கடந்த மாதம் காபூலை விட்டு வெளியேறி பாகிஸ்தானில் உள்ள ஒரு ஹோட்டலில் கடந்த சில வாரங்களாகத் தங்கியிருக்கின்றனர். அவர்களது தற்காலிக விசா இன்றுடன் முடிவடைகிறது. அவர்களை வேறு நாடுகள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அந்த மகளிர் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது அவர்களுக்கு பிரித்தானியா உதவிக் கரம் நீட்டியுள்ளது.

# ஆப்கானியர்களுக்கு உதவிகள்; தலிபான்களுடன் அமெரிக்கா பேச்சு!



ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நேரடியாக மனிதநேய உதவிகளைச் செய்வது குறித்து தலிபான்களுடன் பேச்சு நடத்தப்பட்டது என அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் தெரிவித்துள் ளார். இது தொடர்பாக வொஷிங்டனில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில், இரு தரப்பு பேச்சு குறித்து கருத்து தெரிவித்த நெட் பிரைஸ்:-

'பாதுகாப்பு, பயங்கரவாதம் தொடர்பான கவலைகள் மற்றும் அமெரிக்க குடிமக்கள் பத்திரமாக வெளியேறுவது ஆகியவற்றை மையப்படுத்தியே பேச்சு இருந்தது. ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நேரடியாக மனிதநேய உதவிகளைச் செய்வது குறித்து இருதரப்பும் விவாதித்தோம். தலிபான்களுடனான பேச்சு நேர்மையாகவும் அலுவல்ரீதியாகவும் இருந்தது' என கூறினார். தங்கள் வசமுள்ள அமெரிக்க ஊடகவியலாளரை விடுவிக்க வேண்டும் என பைடன் நிர்வாகம் பேச்சுக்கு முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானை ஆளும் தலிபான்கள் தங்களது செயல்கள் மூலமாகவே மதிப்பிடப்படுவார்களே அன்றி, அவர்களது சொற்கள் மூலமாக அல்ல என்று அமெரிக்கா கூறியுள்ளது.

# பெய்ஜிங் அழுத்தத்திற்கு நாங்கள் அடிபணிய மாட்டோம்-தாய்வான்



சீனாவின் அழுத்தத்திற்கு ஒரு போதும் தாய்வான் அடிபணியாது என்றும் தீவில் பதற்றம் நீடிப்பதால் ஜனநாயக வாழ்க்கை முறையை பாதுகாப்போம் என்றும் ஜனாதிபதி சாய் இங்-வென் தெரிவித்துள்ளார்.

தாய்வானின் தேசிய தினத்தைக் குறிக்கும் வகையில் உரையாற்றிய அவர், சாதிக்கும் அளவிற்கு பெரிய அழுத்தத்தை சீனாவில் இருந்து தாய்வான் எதிர்கொள்வதாக கூறினார்.

தன்னை ஒரு இறையாண்மை கொண்ட நாடாக கருதும் தாய்வானை தனது சொந்த நிலப்பரப்பு என சீனா தெரிவித்து உரிமை கொண்டாடி வருகின்றது.

தனது பிராந்தியங்களுள் ஒன்றான தாய்வானை தேவைப்பட்டால் அனைத்து சக்தியையும் பயன்படுத்தி அதை கைப்பற்றுவதாகவும் சபதம் செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து தாய்வான் வான்பரப்பில் சீனா இராணுவ விமானங்களை அதிக எண்ணிக்கையில் அனுப்பியுள்ளது.

ஊடுருவல் அதிகரித்ததைத் தொடர்ந்து, தாய்வானில் உள்ள 2.3 கோடி மக்கள் பெரும் அச்சத்தில் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க – தலிபான்களுக்கு இடையே பேச்சு



அமெரிக்க மற்றும் தலிபான்களுக்கு இடையிலான பேச்சு கட்டாரின் டோஹாவில் இடம்பெற்று வருகிறது.

நேற்றைய தினம் பேச்சு ஆரம்பிக்கப்பட்ட நிலையில், பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் இருதரப்பிற்குமிடையில் கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

தலிபான்களின் ஆட்சியில் பெண்களுக்கு பாடசாலை செல்லவும், பணியிடங்களுக்கு செல்லவும் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

தலிபான்கள், ஆப்கானிஸ்தான் ஆட்சியை கைப்பற்றியதையடுத்து, முதன்முறையாக அமெரிக்காவுடன் பேச்சுசில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ரஷ்யாவின் விமான விபத்தில் 15 பேர் உயிரிழப்பு

ரஷ்யாவின் டாடர்ஸ்தான் பிராந்தியத்தில் விமானம் விபத்துக்குள்ளானதில் குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளமையுடன் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

பாராசூட் சாகச வீரர்களை ஏற்றிச் சென்ற குறித்த விமானத்தில் பயணம் செய்த 23 பேரில் 7 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது. படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 7 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அதில் ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. கடந்த மாதம், அன்டோனோவ் போக்குவரத்து விமானம் ரஷ்யாவின் கிழக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்தனர். இதேவேளை ஜூலை மாதம் கம் சட்காவில் நடந்த விபத்தில் ஆன் டோனோவ் அன் -26 இரட்டை இஞ்ஜின் விமானம் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 28 பேரும் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# லக்கிம்பூர் படுகொலையை கண்டித்து மகாராஷ்டிராவில் இன்று முழு அடைப்பு



உத்தரப்பிரதேச மாநிலம் லக்கிம்பூரி கேரியில் நடந்த வன்முறையில் விவசாயிகள் உள்பட 8 பேர் உயிரிழந்தனர். இந்த வன்முறைச் சம்பவத்திற்கு இந்தியா முழுவதும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இந்தநிலையில் உத்தரப்பிரதேசத்தில் விவசாயிகள் மீதான தாக்குதல் சம்பவத்தை கண்டித்து மகாராஷ்டிராவில் இன்று ஆளும் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் கட்சிகள் சார்பில் முழு அடைப்பு போராட்டம் நடைபெறுகிறது.

முழு அடைப்பு போராட்டத்தையொட்டி மும்பையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அசம்பாவித சம்பவங்களைத் தடுக்க பொலிஸார் ரோந்துப் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர். மும்பை உள்பட மாநிலம் முழுவதும் நேற்று நள்ளிரவு முதலே முழு அடைப்பு கடைப்பிடிக்கப்பட்டது. பழங்கள், காய்கறிகள் விற்பனையாகும் சந்தை கள்கூட இன்று மூடப்படும் என்று சத்ரபதி சிவாஜி சந்தைத்தொகுதி வியாபாரிகள் சங்கம் அறிவித்திருந்தது. தமது விளைபொருள்களை விவசாயிகள் இன்று சந்தைக்கு கொண்டுவர வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மருத்துவமனை, அம்புலன்ஸ் சேவை, மருந்துக் கடைகள், பால் விநியோகம் போன்ற அத்தியாவசியப் பணிகள் தவிர மற்றவை எவையும் இயங்காது என அறிவித்தல்கள் வெளியாகியிருந்தன.

இதற்கிடையில், மாநிலம் தழுவிய வேலைநிறுத்த அறிவிப்பை மகாராஷ்டிரா மாநில பா.ஜ.க. விமர்சித்துள்ளது. லக்கிம்பூர் கேரி சம்பவத்தை மாநிலத்தை ஆளும் கட்சிகள் அரசியலாக்குகின்றன என்று அம்மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேவேந்திர பட்னாவிஸ் குறிப்பிட்டிருந்தார்.



# நாம் தமிழர் போராட்டத்தில் சர்ச்சைப் பேச்சு கட்சி ஆதரவாளர் சாட்டை துரைமுருகன் கைது

தமிழகத்தின் கன்னியாகுமரியில் உள்ள மலைகளைஉடைத்துகேரளாவிற்கு கடத்துவதாக நாம் தமிழர் கட்சி நேற்று நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்ட அக்கட்சியின் ஆதரவாளர் சாட்டை துரைமுருகன், அரசியல் தலைவர்கள் பற்றி அவதூறாகப் பேசினார் என புகார் எழுந்தது. இது குறித்து தக்கலை பொலிஸ் உதவி ஆய்வாளர் ராஜசேகரன் அளித்த புகாரின் பேரில், நாங்குனேரியில் துரைமுருகனை பொலிஸார் கைதுசெய்து சிறைக்கு கொண்டுசென்றனர்.

அனுமதியின்றி நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில், தமிழகத்தில் கலவரத்தை தூண்டும் வகையில் பேசியமை, முதல்வரையும் தமிழக அரசையும் அவதூறாக பேசியமைதொடர்பாகபல்வேறுபிரிவுகளில் சாட்டை துரைமுருகன் மீது வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவரை 25 ஆம் திகதி வரை சிறையிலடைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

திருச்சி மாநகரின் கே.கே.நகரில் உள்ள மோட்டார் வாகன பழுது நீக்கும் மைய உரிமையாளர் வினோத் என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் குறித்து விமர்சித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டதற்காக சாட்டை முருகன் அவரை மிரட்டினார் எனஏற்கனவே கைதுசெய்யப்பட்டார். அந்த வழக்கில் இருந்து பிணை பெற்ற பின்னர், அமைச்சர் செந்தில்பாலாஜியை மணல் கடத்தலோடு தொடர்பு படுத்தி அவதூறாக பேசியனார் என பதியப்பட்ட வழக்கில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கிலும் 55நாட்களுக்குப்பின்னர் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

# இந்தியாவில் கொரோனாத் தொற்று 3.39 கோடியாக உயர்வடைந்தது

இந்தியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3,39,53,475 இலிருந்து 3,39,71,607ஆக உயர்ந்திருப்பதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்திருக்கிறது. நேற்று முன்தினம் 19,740, நேற்று 18,166 என எண்ணிக்கைகள் பதிவான நிலையில் இன்று வந்த அறிக்கையின்படி கடந்த 24 மணிநேரத்தில் 3,32,71,915இலிருந்து 3,32,93,478ஆக உயர்ந்திருக்கிறது. ஒரேநாளில்193பேர்கொரோனாவால் உயிரிழந்துள்ளமையால் இறந்தோர் எண்ணிக்கை 4,50,589 இலிருந்து 4,50,782 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை இந்தியாவில் 95.19 கோடி டோஸ் கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக இந்திய மத்திய



18,132 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இதேவேளை, ஒரேநாளில் 21,563பேர்கொரோனாவில் இருந்து குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். இதனால் குணமடைந்தோர் எண்ணிக்கை சுகாதார அமைச்சகம் தெரிவித்திருக்கிறது. கடந்த 24 மணி நேரத்தில் ஒரேநாளில் 46,57,679 கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும், தமிழகத்தில் இதுவரை 5,19,43,998 கொரோனாத்தடுப்பூசிசெலுத்தப்பட்டுள்ளதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

# கல்வியறிவற்றவர்கள் நாட்டுக்குப் பாரம் அவர்களால் நல்ல குடிமக்களாக மாற முடியாது

## இந்திய உள்துறையமைச்சர் அமித் ஷா பேட்டி



குஜராத் முதலமைச்சராக நரேந்திர மோடி பதவியேற்று 20 ஆண்டு நிறைவடைந்ததையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில், "கல்வியறிவற்றவர்கள் நாட்டிற்கு சுமை. அவர்களுக்கு அரசியலமைப்பால் வழங்கப்பட்ட உரிமைகள் தெரியாது அல்லது அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கடமைகள் என்னவென்பதும் தெரியாது. அத்தகைய நபர் எப்படி ஒரு நல்ல குடிமகனாக இருக்க முடியும்? அதனால், கல்வியறிவு வழங்குவது மட்டுமே இதற்கான தீர்வாக இருக்க முடியும்.

மோடி குஜராத்தின் முதல்வராக இருந்த சமயத்தில் மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது மாணவர்களின் இடைநிற்றல். இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்க மோடி கடுமையாக முயற்சி செய்தார். இதன் விளைவாக இடைநிற்றல் வீதம் 37 இலிருந்து 1சதவீதமாக குறைந்தது. குஜராத் மாநிலத்தின் கல்வியறிவு வளர்ச்சிக்காக பாடுபட்ட பிரதமர் மோடி இப்போது ஒட்டு மொத்த இந்திய மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்துக்கொண்டிருக்கிறார்.

பிரதமர் மோடி சர்வாதிகாரியாக நடந்து கொண்டிருக்கிறார் எனக் கூறுவது சில அரசியல் கட்சிகளின் வீண்பேச்சு. அமைச்சரவைக் கூட்டங்களில் அனைவரின் கருத்துக்கும் இடம் கொடுக்கக்கூடியவர், தமது கருத்துக்களைத்திணிப்பவர்அல்ல, அனைவரின் ஆலோசனையுடனேயே திட்டங்களை நிறைவேற்றுபவர் மோடி" என்று அமித் ஷா தெரிவித்திருக்கிறார்.

# "என் தந்தை மக்களுக்காக உழைத்தது போதும்" விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் தெரிவிப்பு



'45 ஆண்டுகளாக என் தந்தை மக்களுக்காக உழைத்தது போதும், அவர் ஓய்வு எடுக்கட்டும்' என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

விருதுநகரில் தே.மு.தி.கவின் ஆரம்பநிகழ்வின் 17ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் உரையாற்றிய விஜயபிரபாகரன், தே.மு.தி.கவை தன் தோளில் சுமந்து பழைய நிலைக்கு கொண்டு வருவேன் என உறுதியளித்திருக்கிறார். தே.மு. தி.க. யாருக்கும் அடிமை இல்லை யென்றும் யாருக்கும் அடிபணிந்து போகாது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# இலங்கையில் மீண்டுமொரு பயங்கரவாதத் தாக்குதல்; அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா பேரதிர்ச்சி

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற தாக்குதலைப் போன்று மீண்டுமொரு தாக்குதல் நடைபெற இருப்பதாக ஊடகங்களில் வெளியாகும் செய்தி கேட்டு அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா பேரதிர்ச்சியும் பெரும் கவலையும் அடைந்துள்ளது.

அனைத்து விதமான கெடுதிகளிலிருந்தும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்தருளுமாறு எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதோடு, குறித்த செய்தி தொடர்பிலான உண்மை நிலை பற்றி நாம் அறியாத போதும் இலங்கைவாழ் முஸ்லிம்கள் அனைவரும் இவ்விடயத்தில் மிகவும் அவதானத்தோடும் முன்னெச்சரிக்கையாகவும் நடந்து கொள்ளுமாறு ஜம்இய்யா வேண்டிக் கொள்கின்றது.

இது தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இஸ்லாத்தின் பாதுகாவலர்கள் போன்று தங்களை காட்டிக் கொண்டு, மக்களை பிழையான பாதையில் இட்டுச் செல்லக்கூடிய, இஸ்லாம் மற்றும் ஏனைய மதங்களின் எதிரிகளால் உருவாக்கப்பட்டதாக கருதப்படும் அமைப்புகளே ஐ.எஸ்.ஐ.எஸ். மற்றும் ஏனைய இஸ்லாமிய பெயர்தாங்கிய பயங்கரவாத அமைப்புகளாகும்.

இவ்வாறான தீவிரவாத அமைப்புகள் விடயத்தில் விழிப்புடன் செயற்படுமாறு சகல முஸ்லிம்களையும் ஜம்இய்யா கேட்டுக் கொள்கின்றது.

பின்னணியிலுள்ள சூத்திரதாரிகள் யார் என்பது ஆராயப்பட வேண்டிய இவ்வமைப்புகள், இஸ்லாத்திற்கு எதிரான தீவிரவாத அமைப்புகள் என்பதே உலக வாழ் இஸ்லாமிய அறிஞர்களின் ஏகோபித்த நிலைப்பாடாகும்.

கடந்த 2015.07.23 ஆம் திகதி இவ்வமைப்புகள் முற்றிலும் இஸ்லாத்துக்கு முரண்பட்டவை என்ற பிரகடனத்தை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவும் ஏனைய சமூக அமைப்புகளும் இணைந்து வெளியிட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

எனினும், கடந்த 2019.04.21ஆம் திகதி தீவிரவாதிகளால் நடாத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களால் பல அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இன்னும் பலர் காயங்களுக்குள்ளாகியதோடு நம் நாட்டின் நிம்மதியும் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாக்கப்பட்டதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

எமது சமூகம் இந்நாட்டுக்காக பாரிய பங்களிப்புக்களையும் தியாகங்களையும் செய்து வந்துள்ளது. நம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும், பாதுகாப்புக்கும் அளவிலா பங்களிப்பை நம் மூதாதையர்கள் வரலாறு நெடுகிலும் செய்து வந்துள்ளனர்.

அவ்வாறே நம் நாட்டுக்கு பிரயோசனமான வெளிநாட்டு உறவைக் கட்டியெழுப்புவதில் முன்னின்று செயற்பட்டுள்ளனர். நம் தாய்நாட்டை அந்நியவர்கள் ஆக்கிரமிக்க முயற்சித்தபோதெல்லாம் அக்காலத்தில் நம் நாட்டை ஆட்சி செய்த உள்நாட்டு அரசர்களுக்கு ஒத்துழைப்பாக இருந்து வந்துள்ளோம்.

சுதந்திரத்தைப் பெற்று ஜனநாயகக் குடியரசாக நம் தாய்நாடு மாறியதிலிருந்து நம் தலைவர்கள் மதங்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பவும் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்கவும் காத்திரமான முயற்சிகளை செய்துள்ளனர்.

முஸ்லிம் பெயர்தாங்கிய வழிதவறிய சிலரால் நடாத்தப்பட்ட மிலேச்சத்தனமான இத்தாக்குதலை தொடர்ந்து, முஸ்லிம்களுக்கெதிரான அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் சில தீய சக்திகளால் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு, முஸ்லிம்கள் பற்றிய வெறுப்பும் சந்தேகமும் மக்கள் மனதில் உருவாக்கப்பட்டு வருவதோடு, எமது மூதாதையர்கள் இந்நாட்டுக்குச் செய்த பாரிய பங்களிப்புக்கள் மறக்கடிக்கப்படும் நிலை உருவாகி வருவது கவலைக்குரிய விடயமாகும்.

சிலர் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சமூக ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் தீவிரமாக செயற்படுவது வருந்தத்தக்கதாகும். இவ்வாறான செயற்பாடுகளினால் முஸ்லிம் சமூகம் தூண்டப்படாமல், கட்டுப்பாடுடன் செயற்படுமாறு ஜம்இய்யா கேட்டுக் கொள்கின்றது.

இது விடயத்தில் ஜம்இய்யாவின் மாவட்ட, பிரதேசக் கிளைகள், பள்ளிவாசல் நிர்வாகங்கள், சமூக அமைப்புக்கள் என அனைவரும் கவனம் செலுத்துமாறும் ஒவ்வொரு முஸ்லிமும் அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறும் ஏனைய சமூகங்களுடன் நல்லுறவை கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபடுமாறும் ஜம்இய்யா வினயமாக வேண்டிக் கொள்கின்றது.என உள்ளது .



## ஒரு தொகை போதை மாத்திரைகளுடன் சம்மாந்துறையில் இரண்டு பேர் கைது

வாழைச்சேனை கல்குடா பிரதேசத்துக்கு கொண்டு வரப்படவிருந்த ஒரு தொகை போதை மாத்திரைகளுடன் 31 வயதுடைய இருவர் சம்மாந்துறையில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப்புலனாய்வுப்பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நீலாவணை விடே அதிரடிப் படையினரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

போதை மாத்திரை கொண்டு வர பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டதுடன், இருவரும் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## ஆனைகட்டியவெளியில் வயலை அண்டிய பகுதியில்

# குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்



வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைகட்டியவெளி பிர தேசத்தில் வயலை அண்டிய இடமொன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் 9 ஆம் திகதி மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய சரவணமுத்து தங்கவேல் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இவர் நீண்ட நாட்களாக தனது மனைவி பிள்ளைகளை பிரிந்து தனது உறவினர்க ளின் வீடுகளில் வாழ்ந்து வந்தார் எனவும், அவர் நாளாந்தம் பல இடங்களில் கூலித்தொழிலுக்கு சென்று வருகிறவர் எனவும் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் க.ஜீவராணி அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பில் இடம்பெற்ற பாரிய விபத்து 20 வயது இளைஞன் சம்பவ இடத்தில் சாவு

மட்டக்களப்பில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 20 வயதுடைய இளைஞன் ஒருவர் பலியான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் முகத்துவாரத்தில் இருந்து மட்டக்களப்பு செல்லும் வழியில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

கருவேப்பங்கேணியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் இரு இளைஞர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டிக்குள் 9ஆவது முறையாக சென்னை சுப்பர் கிங்ஸ்



ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதிப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை வென்று இறுதிப் போட்டிக்கு முதல் அணியாகத் தெரிவானது.

துபாயில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. ப்ரித்வி ஷா 60 ஓட்டங்களையும் ரிஷப் பண்ட் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்க ளையும் எடுத்தனர். சென்னை அணியின் ஹசில்வுட் 2 விக்கெட்டுக்களையும் ஜடேஜா, மொயின் அலி மற்றும் பிராவோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கையடைந்து, ஒன்பதாவது முறையாக ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ருத்துராஜ் கெய்க்வாட் 70 ஓட்டங்களையும் ரொபின் உத்தப்பா 63 ஓட்டங்களையும் எடுத்தனர். டெல்லி அணியின் டொம் கரன் 3 விக்கெட்டுக்களையும் அன்ரிச் நோர்ட்ஜே மற்றும் அவிஷ்கான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ருத்துராஜ் கெய்க்வாட் தெரிவு செய்யப்பட்டார்.

வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில், இரண்டாவதாகத் தெரிவாகும் அணியை சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

# யு.இ.எப்.ஏ. நேன்ஸ் லீக் சம்பியனானது பிரான்ஸ்




ஐரோப்பாவின் யு.இ.எப்.ஏ. நேன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடரில் பிரான்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது. பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் 2-1 என்ற கோல்கள் கணக்கில் பிரான்ஸ் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

ஸ்பெயின் அணியின் மைக்கேல் ஒயர்ஸபால் போட்டியின் 64 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து எண்ணிக்கையை ஆரம்பித்தார். ஆனால், அந்த அணியால் மேற்கொண்டு கோலெதையும் அடிக்கமுடியாமல் போனது. பிரான்ஸ் அணியின் கரீம் பென்ஸிமா போட்டியின் 66ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும் 80 ஆவது நிமிடத்தில் எம்பாப்வே இன்னொரு கோலையும் அடிக்க, 2-1 என அந்த அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது முறையாக நடைபெற்ற இந்தத்தொடரில் முதல்முறையாக பிரான்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. முதல் தொடரில் போர்த்துக்கல் அணி சம்பியனாகியிருந்தது.



# சாவ் கால்பந்து சம்பியன்ஷிப் தொடரில் மாலைதீவுகளிடம் தோற்றது இலங்கை

தெற்காசிய கால்பந்தாட்ட சம்மேளன (சாவ்) சம்பியன்ஷிப் தொடரில் தனது இறுதி லீக் போட்டியில் மாலைதீவுகள் அணியை எதிர்கொண்ட இலங்கையணி 1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்துள்ளது. இந்தத் தோல்வியினால் சாவ் சம்பியன்ஷிப் தொடரில் எந்தவொரு வெற்றியையும் பெறாமல் முதல் அணியாக இலங்கை அணி தொடரிலிருந்து வெளியேறுகிறது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற பங்களாதேஷ் மற்றும் நேபாள அணிகளுக்கு எதிரான போட்டியில் தோல்வி கண்டிருந்த இலங்கை அணி, இந்தியாவுடனான போட்டியை கோல்கள் எதுவுமின்றி சமப்படுத்தியிருந்தது. மாலைதீவுகள் தமது முன்னைய போட்டியில் நேபாளத்திடம் தோல்வியடைந்திருந்தாலும் பங்களாதேஷை வெற்றி கொண்ட நிலையில் இலங்கையையும் வென்றிருக்கிறது.

போட்டி ஆரம்பித்து 6ஆவது நிமிடத்தில் மாலைதீவு வீரர் அலி அஷ்வக் கோலடித்து வேகமாக மாலைதீவுகள் அணியை ஆரம்பத்திலேயே முன்னிலை பெறச் செய்தார். அது அலி அஷ்வக் சாவ் சம்பியன்ஷிப் போட்டிகளில் அடித்திருக்கும் 22 ஆவது கோலாகும். அதன் பின்னர் இரு அணிகளும் மேற்கொண்ட கோல் போடும் முயற்சிகள் பயனளிக்கவில்லை. இறுதியில் மாலைதீவுகள் அணி 1-0 என இலங்கையை வென்றது.

# ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் நான்கு மாற்றங்கள்



ஐ.சி.சி. ரி-20 கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியில் நான்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த அணியில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி அணி அறிவிக்கப்பட்டுள்ளது. உபாதைக்குள்ளாகியிருந்த லஹிரு மதுஷங்க, நுவான் பிரதீப் ஆகியோருடன் கமிந்து மெண்டிஸ், பிர வீன் ஜயவிக்ரம ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பதிலாக வேகப்பந்துவீச்சாளர்களான பினுர பெர்னாண்டோ, லஹிரு குமார ஆகியோருடன் பதும் நிஸங்க, அகில தனஞ்சய ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

உபாதைக்குள்ளாகியதன் காரணமாக இறுதி அணியில் இடம்பெறுவாரா என்ற சந்தேகத்துக்குள்ளாகியிருந்த குசல் பெரேரா 15 பேர்கொண்ட அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணி விவரம் -

தசுன் ஷானக (தலைவர்), தனஞ்சய டி சில்வா (உப தலைவர்), அவிஷ்க பெர்னாண்டோ, குசல் பெரேரா, தினேஷ் சந்திமால், பானுக ராஜபக்ஷ, பதும் நிஸங்க, சரித் அசலங்க, வனிந்து ஹஸரங்க, சமிக்க கருணாரத்ன, துஷ்மந்த சமீர, அகில தனஞ்ஜய, மஹீஷ் தீக்ஷன, பினுர பெர்னாண்டோ, லஹிரு குமார

இலங்கை அணி தனது முதல் சுற்றுப்போட்டிகளில் வரும் 18 ஆம் திகதி நமீபியாவையும், 20 மற்றும் 22 ஆம் திகதிகளில் முறையே அயர்லாந்து, நெதர்லாந்து அணிகளையும் எதிர்கொள்ளவுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# 20 ஆவது திருத்தம் தோல்வியடைவு அரசு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்



## என்கிறார் ரணில்

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தோல்வியடைந்ததை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விசேட அறிக்கையொன்றினை வெளியிட்ட அவர், அமைச்சர்களுடனான சந்திப்பின் போது, ஜனாதிபதி தனக்கு மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் அனுபவம் இருப்பதை ஒப்புக்கொண்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆவது திருத்தத்தின் ஊடாக அமைச்சரவை ஆட்சி முறை ரத்து செய்யப்பட்டது என்பதை சுட்டிக் காட்டிய ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தை கொண்டு செல்ல வேண்டும் எனக் கூறினார். எனவே, பிரதமர் முன் வந்து அனுபவம் உள்ள மற்ற அனைத்து அமைச்சர்களையும் இணைத்து ஒன்றாக வேலை செய்ய வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.





# திஸரவின் பந்துக்கு முகம்கொடுத்த கோட்டா

இலங்கை இராணுவத்தின் 72 ஆவது வருடப் பூர்த்தியையொட்டி, அநுராதபுரம் கஜபா ரெஜிமென்ட் தலைமையகத்தில் விசேட நிகழ்வொன்று நேற்று (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கிரிக்கெட் மைதானத்தை திறந்து வைத்ததுடன், கிரிக்கெட் விளையாட்டிலும் ஈடுபட்டார்.

அந்தவகையில், இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் திஸர பெரேராவின் பந்துக்கு ஜனாதிபதி உற்சாகமாக முகம் கொடுத்தமை, தற்போது சமூக வலைத்தளங்களில் வெகுவாகப் பகிரப்பட்டு வருகிறது.

மேலும், இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற கொள்கைக்குள் மோசடிகள் அற்று சரியான முறையில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.



# கைவிடப்பட்ட 4 கைக்குண்டுகள் மட்டக்களப்புப் பகுதியில் மீட்பு!

மட்டக்களப்பு- பெரிய கால போட்ட மடு பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் நான்கு கைக் குண்டுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வவுணதீவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, தாண்டியடி விசேட அதிரடிப்படையினரும் இணைந்து இந்தக் கைக்குண்டுகளை மீட் டுள்ளனர்.

பெரியகாலபோட்டமடு பிள்ளையார் ஆலயத் துக்கு பின்புறம் உள்ள வயற்காணியில் விதைப் பிற்கான ஆரம்பக்கட்ட வேலைகளை மேற்கொள்ளும்போது, கைக் குண்டுகளை கண்ட காணி உரிமையாளர், பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து நான்கு கைக்குண்டுகளையும் அவர்கள் மீட்டுள்ளனர்.

இந்த 4 கைக்குண்டு களும் கடந்த யுத்த காலப்பகுதியில் கைவிடப்பட்டவையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

# பண்ணை ஒன்றின் காவலாளி மட்டக்களப்பில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு- கொம்மாதுறை, தீவுப்பகுதியி லுள்ள பண்ணையின் காவலாளி சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

ஏறாவூர்ப்பற்று- ஒரு முலைச் சோலை கொம்மாதுறை பகுதியைச் சேர்ந்த 53 வயதான கனகரெட்ணம் தியாகராசா என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

கொம்மாதுறை தீவுப் பகுதியிலுள்ள கால்நடைப்பண்ணை ஒன்றில் இவர் கூலித்தொழிலாளியாக சுமார் 5 வருடமாக வேலை புரிந்து வந்துள்ளார்.

அந்தவகையில் ஞாயிற்றுக்கிழமை காலை, அவர் வீட்டில் இருந்து வேலைக்கு சென்றார் எனவும் அங்கு தகராறுகள் இடம்பெற்றன எனவும் உயிரிழந்தவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவ இடத் துக்கு வருகைதந்த மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடயவியல் பொலிஸார் மற்றும் ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோர் மரணம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தமை யுடன், சடலத்தைப் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லுமாறும் பணிப்புரை விடுத்திருந் தனர். இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தொற்றுக்குள்ளாகும் கர்ப்பிணிகளை வைத்தியசாலையில் சேர்க்க முடிவு!

கொரோனாத் தொற்றுக்கு உள்ளா கும் அனைத்து கர்ப்பிணிப் பெண்களையும் வைத்தியசாலையில் சேர்க்க குடும்ப சுகாதாரப் பணியகம் தீர்மானித்துள்ளது.

இனிவரும் காலங்களில் அவர்களை வீட்டில் வைத்து சிகிச்சை வழங்க முடியாது என அந்தப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரையில் 8 ஆயிரத்து 500 கர்ப்பிணிப் பெண்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 56 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் சித்ரமாலி டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# நிறுத்தி வைக்கப்பட்ட லொறியுடன் மோதி பற்றி எரிந்த மோட்டார் கார்

ஹைலெவல் வீதியின் தெல்கந்த பகுதியில் உள்ள ரிவி தெரண கலையகத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, ஒளிப்பதிவு உபகரணங்களை ஏற்றி வந்த லொறியுடன் மோட்டார் கார் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகி உள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு 11 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோட்டார் கார் மோதியதில் ஏற்பட்ட தீயில் இரு வாகனங்களும் தீக்கிரையாகியுள்ளன.

மோட்டார் காரில் பயணித்த இருவர் காயங்களுக்கு உள்ளாகி களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2021இல் வெளியிடப்பெற்றது.